செய்தி வெளியீடு எண்: 194 நாள் : 18.04.2016

# தேர்தல் விதி மீறி, ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.48 லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள், ரூ.12 லட்சம் மதிப்பிலான சிகரெட்டுகள் பறிமுதல்

## இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கம் ரூ.24 கோடி.

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. இந்த நிலையில், நாகப்பட்டினத்திலிருந்து 15.04.16 அன்று வாகனத்தில் எடுத்துச் சென்ற 1.765 கிலோ தங்க நகைகள் மற்றும் அரியலூர் பகுதியிலிருந்து எடுத்துச் சென்ற ரூ.12.03 லட்சம், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.3 லட்சம், ஈரோடு மாவட்டத்தில் ரூ.4.94 லட்சம், சென்னை மாநகரில் ரூ.3.50 லட்சம், திண்டுக்கல்லில் ரூ.1.07 லட்சம், இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.1.18 லட்சம், வேலுரில் ரூ.8 லட்சம் மதிப்பிலான 8000 லுங்கிகள், ரூ.3 லட்சம் மதிப்பிலான காட்டன் துணி வகைகள், ரூ.2 லட்சம் மதிப்பிலான 2,500 லிட்டர் கடலை எண்ணைய், மதுரை மாநகரில் ரூ.1.44லட்சம் மதிப்பிலான தாமிரப் பாத்திரங்கள், சேலம் மாவட்டத்தில் ரூ.2.46 லட்சம் ரொக்கம் உட்பட மொத்தம் ரூ.29,15,930/- பறிமுதல் செய்யப்பட்டது.

நிலையான கண்காணிப்புக் குழுவினர் (SST) 15.4.16 அன்று சோதனை செய்த போது, வேலூர் மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற %6.34 லட்சம் மதிப்பிலான சோப்புகள் அடங்கிய பெட்டிகள், சேலம் மாநகரில் ரூ.12 லட்சம் மதிப்பிலான சிகரெட் பாக்கெட் கட்டுகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.1.79 லட்சம் ரொக்கம் உட்பட மொத்தம் ரூ.5,25,800/- ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை இக்குழுவினரால் ரூ.14,37,57,304/- ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

உரிய அனுமதியின்றி டிஜிட்டல் பேனர் வைத்தது, வாக்கு சேகரிக்க சென்ற இடத்தில் பட்டாசுகள் வெடித்தது, கூம்பு வடிவ ஒலிபெருக்கி பயன்படுத்தியது, அனுமதி பெறாமல் துண்டுப் பிரசுரம் வழங்கியது, சுவர் விளம்பரம் செய்தது, வாகனத்தில் கட்சிக் கொடியினை கட்டிச்சென்றது போன்ற தேர்தல் விதிமுறைகளை மீறியது ஆகியவற்றிற்காக பல்வேறு அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9